# தமிழ் இலக்கியத்தின் முற்போக்கு எழுத்தாளர் செம்பியன் செல்வன்

அத்தியடியிலும் , நீராவியிடியிலும் என் இலக்கிய ஆசான் செம்பியன் செல்வனுடன் அளவளாவிய தருணங்கள் ஆயிரம். இலங்கையின் பன்முக ஆளுமை கொண்ட எழுத்துக்கலைஞன் செம்பியன் செல்வன் எனது நான்காவது கவிதைத் தொகுதியான 1989 இல் வெளியான 'உறக்கந்தேடும் உலகிற்காய்' என்ற நூலுக்கு முன்னுரையையும் எழுதியுள்ளார்.

நாவல், சிறுகதை, நாடகம், உருவகம், குறுங்கதை, திரைப்படம், சஞ்சிகை என தமிழ் இலக்கியத்தின் பல்வேறு பிரிவுகளிலும் தனது ஆளுமையினைப் பதித்தவர் செம்பியன் செல்வன். பன்முக ஆளுமை கொண்டவர் அவர். இரா ஜகோபால் என்ற இயற்பெயருடைய செம்பியன் செல்வன் (ஜனவரி 1, 1943_ மே 20, 2005) புகழ்பெற்ற எழுத்தாளர்.

அவர் இளவயதிலேயே சிறந்த வாசிப்பாளனாக இருந்தார்.1960 இல் பேராதனை பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்று புவியியல் சிறப்புக்கலைப் பட்டதாரியானார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட இலக்கிய மறுமலர்ச்சியால் உருவாக்கப்பட்டவர்களில் செம்பியன் முக்கியமானவர். இந்தப் பல்கலைக்கழகச் சூழலில் ஆற்றல்மிக்க எழுத்தாளர் கூட்டம் செம்பியன் செல்வனின் நண்பர்களாக இருந்துள்ளனர்.

பட்டப்படிப்புக்காக 1960களில் பேராதனை பல்கலைக்கழகத்துக்குள் இவருடன் செங்கை ஆழியான், துருவன், அங்கையன் கைலாசநாதன், செ. கதிர்காமநாதன், செ. யோகநாதன், கலாபரமேஸ்வரன், நவசோதி, குந்தவை, ஆகியோர் இணைந்து 'பல்கலை வெளியீடு' என்னும் அமைப்பை உருவாக்கி ஆண்டுக்கொரு சிறுகதைத் தொகுதியை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டனர். மேலும் 1963ஆம் ஆண்டு ஜனவரியில் பத்து சிறு கதைகளைத் தாங்கி வெளிவந்த 'விண்ணும் மண்ணும்' செம்பியன் செல்வனால் தொகுக்கப்பட்டது.

**செம்பியன் செல்வன் படைப்புகள்:**

சர்ப்பவியூகம் சிறுகதைத்தொகுதி, அமைதியின் இறகுகள் (சிறுகதைகள்),குறுங்கதைகள் நூறு (குறுங்கதைகள்), கானகத்தின் கானம் (நாவல்), நெருப்பு மல்லிகை (நாவல்), விடியலைத் தேடும் வெண்புறாக்கள் (நாவல்), மூன்று முழு நிலவுகள் (நாடகம்), ஈழத்துச் சிறுகதை மணிகள் (விமர்சனம்), நாணலின் கீதை (தத்துவம்)



## அன்னாரின் நினைவுதினம் இன்று






செம்பியன் செல்வனின் 'நெருப்பு மல்லிகை' என்ற நாவல் 81 நாவல்களிடையே முதலாவதாகத் தெரிவாகியது. அதிசிறந்த பிரதேசப் பரிசு நாவல் என இரட்டை முதல் பரிசு பெற்றது இந்த நாவல்.

' விடியலைத் தேடும் வெண்புறாக்கள்' எனும் நாவலை செம்பியன் செல்வன் தொடராக எழுதிவந்தார். இது 300 பக்கங்கள் கொண்ட நூலாக அச்சாகியிருந்தது. 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வுக் காரணமாக 'விடியலைத் தேடும் வெண்புறாக்கள்' நாவலின் அச்சான பிரதிகள் அழிந்து போயின.

1963 காலப்பகுதியில் செங்கை ஆழியானும், செம்பியன் செல்வனும் ஒருவர் மாறி ஒருவராக எழுதிய தொடர்தான் 'நிழல்கள்'. இந்த இருவரும் இணைந்து எழுதிய 'நிழல்கள்' யாழ் சமூகத்தின் முதிரா இளைஞர்களின் மனப் போராட்டங்களைச் சுவையாகச் சித்தரிக்கும் நாவல். மேலும் செம்பியன் செல்வன் 'நேரங்கள்' 'கர்ப்பக்கிரகம்' ஆகிய நாவல்களையும் படைத்துள்ளார்.

புவியியல் சிறப்புப்பட்டதாரியான இவர் விவேகி சஞ்சிகையின் இணையாசிரியராக இருந்தவர். விவேகி 1970களில் இலங்கையில் இருந்து மாதாந்தம் வெளிவந்த தரமான தமிழ் சிற்றிதழ் ஆகும்.

'அமிர்த கங்கை' சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தவர் செம்பியன் செல்வன். 'அமிர்த கங்கை' இதழ் யாழ்ப்பாணத்தில் இருந்து 80 களின் நடுப்பகுதியில் வெளிவந்தது.

புவியியல் பட்டதாரியாக பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய செம்பியன் செல்வன் திருகோணமலை சென் ஜோசப் கல்லூரியிலும் செட்டிக்குளம் மகாவித்தியாலயத்திலும், யாழ் இந்துக் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணியாற்றினார்.

செங்கை ஆழியானின் 'வாடைக்காற்று' நாவலை மூலக்கதையாகக் கொண்டு, அவரது அனுமதியுடன் செம்பியன் செல்வன் திரைக்கதை உரையாடல் எழுத்துப் பிரதியை தயாரித்தார். இந்த எழுத்துப் பிரதியை பின்னர் திரைப்படமாக தயாரித்தனர்.

செங்கை ஆழியான் எழுதிய வாடைக் காற்று திரைப்படமான பொழுது, அதற்கான திரைக்கதை, வசனங்களை எழுதிய செம்பியன் செல்வனுக்கு இலங்கை அரச திரைப்படக் கூட்டுத்தாபனம் ஈழத் திரைப்பட வரலாற்றிலேயே முதன்முறையாக A தரமுடையதாகத் தெரிந்து ரூபா 1.84,000 மானியம் வழங்கியது. இவர் தொடர்ந்தும் ஈழத் திரைப்படக் குறும்படங்களிலும், அவை தொடர்பான வழிகாட்டல் விரிவுரைகளிலும் கணிசமான பங்களிப்புச் செய்துள்ளார். இலங்கையின் நவீன இலக்கிய உலகின் ஈடிணையற்ற இலக்கியவாதியாகத் திகழ்ந்த செம்பியன் செல்வன் மே 20, 2005இல் காலமானார்.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**